## அரவிந்த் கண் மருத்துவமனைகள்

**அரவிந்த் - மதுரை**
1, அண்ணாநகர், மதுரை - 625 020, போன்: 0452- 4356 100

**அரவிந்த் - திண்டுக்கல்**
பழைய எண்: 21/1, தாடிக்கொம்பு ரோடு,
திண்டுக்கல் - 624001; போன்: 0451- 2448 100

**அரவிந்த் - தேனி**
பெரியகுளம் ரோடு, தேனி - 625 531, போன்: 04546 - 252 658

**அரவிந்த் - திருநெல்வேலி**
சுவாமி நெல்லையப்பர் ஹை ரோடு
திருநெல்வேலி - 627 001, போன்: 0462 - 4356 100

**அரவிந்த் - கோவில்பட்டி**
4/897, புதிய அப்பனேரி, திருவேங்கடம் மெயின் ரோடு
G.V.N. கல்லூரி (அஞ்சல்), கோவில்பட்டி-628 502, போன் : 04632 - 290800

**அரவிந்த் - தூத்துக்குடி**
மீனாட்சிபுரம் மேற்கு, பழைய பஸ் ஸ்டாண்ட் அருகில்,
தூத்துக்குடி- 628 002 ; போன்: 0461 - 2322410/2331710

**அரவிந்த் - கோயம்புத்தூர்**
அவினாசி ரோடு, கோயம்புத்தூர் - 641 014
போன்: 0422 - 436 0400

**அரவிந்த் - திருப்பூர்**
தாராபுரம் மெயின் ரோடு, செட்டிப்பாளையம் போஸ்ட்,
திருப்பூர் - 641 608, போன்: 0421 -226 6100

**அரவிந்த் - உடுமலைபேட்டை**
112, தளி ரோடு, பழனியாண்டவர் மில்ஸ்
உடுமலைப்பேட்டை - 642 126, போன்: 0425 - 2260400

**கோயம்புத்தூர் சிட்டி சென்டர்**
கவுலி பிரவுன் ரோடு, R.S. புரம், கோயம்புத்தூர் 641 001,
போன்: 0422 - 254 0400

**அரவிந்த் - பாண்டிச்சேரி**
தவளைக்குப்பம் ஜங்ஷன், கடலூர் ரோடு,
பாண்டிச்சேரி - 605 007; போன்: 0413 - 261 9100

**அரவிந்த் - சேலம்**
காளியம்மன் கோவில் எதிரில், சங்ககிரி மெயின் ரோடு நெத்திமேடு,
சேலம் - 636 002; போன்: 0427 - 235 6100

**அரவிந்த் - சென்னை**
பூந்தமல்லி நெடுஞ்சாலை, நூம்பல்,
சவீதா பல் மருத்துவக்கல்லூரி எதிரில்,
சென்னை - 600 077, போன்: 044 - 40956100

**அரவிந்த் - திருப்பதி**
அலிப்பிரி - zoo பார்க் ரோடு, NCC வளாகம் பின்புறம்
திருப்பதி - 517 505, சித்தூர் மாவட்டம், ஆந்திரபிரதேசம்,
போன்: 0877 - 2502100

**அரவிந்த்-தஞ்சாவூர் (2025 க்கு பின்பு)**
திருவேங்கடம் நகர் அருகில், கலைஞர் நகர் ரோடு,
புதிய பேருந்து நிலையம் பின்புறம், தஞ்சாவூர் - 613005

# அரவிந்த் கண் மருத்துவமனை

### +2 தேர்ச்சியடைந்த மாணவிகளுக்கு சிறப்பான இரண்டு ஆண்டுகள் பயிற்சி மற்றும் பயிற்சியில் தேர்வடைந்தபின் வேலை வாய்ப்பு



**Dr. G. வெங்கடசாமி**
**நிறுவனர்**

நோக்கம்: தேவையற்ற பார்வையிழப்பை அறவே நீக்குதல்



மதுரை (1976)



திண்டுக்கல் (2010)



தேனி (1985)



திருப்பதி (2019)



திருநெல்வேலி (1988)



சென்னை (2017)



கோவில்பட்டி (2019)



தூத்துக்குடி (2012)



கோயம்புத்தூர் (1997)



சேலம் (2011)



உடுமலைப்பேட்டை (2012)



திருப்பூர் (2010)



பாண்டிச்சேரி (2003)



கோயம்புத்தூர் சிட்டி சென்டர் (2014)

அரவிந்த் கண் மருத்துவமனைகள்



அரவிந்த் கண் மருத்துவமனை 1976ம் ஆண்டு மதுரையில் 5 மருத்துவர்கள், 5 செவிலியர்கள் மற்றும் 11 படுக்கைகளுடன் டாக்டர். வெங்கடசாமி அவர்களின் தலைமையில் தேவையற்ற பார்வை இழப்பை அறவே நீக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையுடன் தொடங்கப்பட்டது.

### பயிற்சியின் அறிமுகம்

- இந்தியாவிலேயே முதன் முதலில் இடைநிலை கண்ணியல் பணியாளருக்கான பயிற்சி அரவிந்த் கண் மருத்துவமனையில் தொடங்கி செயல்பட்டு வருகிறது.
- 46 வருடங்களாக கண் இடைநிலை கண்ணியல் பணியாளருக்கான முழுமையான வேலை வாய்ப்புடன் கூடிய 2 வருட பயிற்சி அளிக்கப்படுகிறது.
- இதுவரை தோராயமாக 9,000 மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த பயிற்சி வகுப்புகள் மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், தேனி, பாண்டிச்சேரி, சேலம், சென்னை, திருப்பதி ஆகிய இடங்களில் உள்ள அரவிந்த் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன.

### பயிற்சி அளிக்கப்படும் துறைகள்

#### வெளிநோயாளிகள் பிரிவு

வெளிநோயாளி பிரிவிற்கு வரும் நோயாளிகளுக்கு நோயின் தன்மைக்கேற்ப மருத்துவர்கள் பரிசோதனைகளை செய்து தரமான சிகிச்சை அளிக்க உதவுதல்.

#### உள்நோயாளிகள் பிரிவு

உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் கண் நோயாளிக்கு மருத்துவரின் அறிவுரைப்படி பரிவுடன் கூடிய தரமான சிகிச்சையை அளிக்க உதவுதல்

#### அறுவை சிகிச்சை பிரிவு

கண் அறுவை சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கும், அறுவை சிகிச்சை செய்யும் கண் மருத்துவருக்கும் முழுமையாக உதவுதல்.



#### விழிஒளி ஆய்வாளர் பிரிவு

நோயாளிகளுக்கு தகுந்த முறையில் பார்வை பரிசோதனை செய்து தரமான கண் கண்ணாடிகளை பரிந்துரை செய்தல்.

#### மருத்துவ பதிவேட்டுத்துறை

நோயாளிகளிடம் சரியான தகவல்களை சேகரித்து வழிநடத்துதல் மற்றும் மருத்துவ பதிவேடுகளை பாதுகாத்தல்.

#### மருத்துவ ஆலோசனைப் பிரிவு

நோயாளிகளின் பயத்தையும், சந்தேகங்களையும் தெளிவுப்படுத்தி தேவையான பரிசோதனை மற்றும் சிகிச்சை பெற உதவுதல்.

#### கண்கண்ணாடிப் பிரிவு

நோயாளிகளுக்கு மருத்துவக் குறிப்பின்படி கண் கண்ணாடி தயார்செய்து வழங்குதல்.

#### பெசிலிட்டி (வசதி) ஒருங்கிணைப்பாளர்

சுத்தம், சுகாதாரம், அமைதி மற்றும் பாதுகாப்பு நிறைந்த சூழலை மருத்துமனையில் உருவாக்குதல்.

#### ஆய்வக உதவியாளர்

மருத்துவரின் பரிந்துரைப்படி இரத்தப் பரிசோதனை செய்தல் மற்றும் பரிசோதனை முடிவுகளை பதிவு செய்தல்.

#### மருந்தகம்

மருத்துவரின் பரிந்துரை சீட்டின்படி மருந்துகளை நோயாளிகளுக்கு சரிபார்த்து விநியோகம் செய்தல்.

#### மருத்துவ உபகரணங்களை பராமரிக்கும் துறை

மருத்துவமனையின் அனைத்து துறைகளுக்கும் தேவையான அனைத்து உபகரணங்களையும் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

#### பண்டகசாலை

மருத்துவமனையின் அனைத்து துறைகளுக்கும் தேவையான பொருட்களை வாங்கி தங்கு தடையின்றி வழங்குதல்.









## அடிப்படைத் தகுதிகள்

1. வயது வரம்பு 20
2. படிப்பு : +2 தேர்ச்சியடைந்த பெண்கள்
3. அரசாங்க பள்ளிகளில் படித்து பின்தங்கிய குடும்பங்களிலிருந்து வரும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## பயிற்சிக்கு தேர்வு செய்யும் முறை

பொது அறிவுத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு

## பயிற்சிக்கான விளக்கம்

1. பயிற்சி காலம் 2 வருடங்கள்
2. முதல் வருடம் உதவித் தொகை (Stipend) ரூ.1700/-
3. இரண்டாம் வருட உதவித் தொகை (Stipend) ரூ.1900/-
4. சலுகை விலையில் ஆரோக்கியமான சுவை நிறைந்த உணவு கட்டணம் மாதம் ரூ. 1500/-
5. தங்கும் இடம் மருத்துவமனை வளாகத்திற்குள்ளேயே உள்ளது

## பயிற்சி முறை

1. அனுபவம் மிகுந்த பயிற்றுநர்களைக் கொண்டு பாடத்திட்டத்துடன் இணைந்து செயல்முறை பயிற்சி விளக்கம்
2. தேவைக்கேற்ப மருத்துவர்கள் நடத்தும் வகுப்புகள்
3. திறனை மேம்படுத்தும் பயிற்சி முறைகள் (smart class)
4. ஒளி, ஒலி வசதிகள் அமைந்த வகுப்பறைகளில் பயிற்சி
5. துறைசார்ந்த செயல் முறைகளை மதிப்பீடு செய்து சான்றளித்தல்
6. மென் (soft skills) திறன்களை மேம்படுத்தும் பயிற்சி
7. நற்பண்புகள் மற்றும் கலாச்சாரத்தை மெருகேற்ற வாய்ப்புகள்



## பாதுகாப்பு அம்சங்கள்

1. மருத்துவமனை வளாகத்திற்குள்ளேயே இயற்கை மற்றும் ஆரோக்கியமான, பாதுகாப்பான பெண்களுக்கு ஏற்ற வசதியுடன் கூடிய தங்கும் இடம்.
2. பெண் விடுதி காப்பாளர் விடுதியிலேயே தங்கி செவிலியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வசதி உள்ளது.

## பயிற்சியின் விவரம்

### முதல் ஆண்டு

1. முதல் வருடம் முழுவதும் தேர்வு செய்யப்பட்ட மருத்துவமனையில் பயிற்சி அளிக்கப்படும்
2. முதல் இரண்டு மாதம் அடிப்படை பயிற்சி, அடுத்த பத்து மாதங்கள் துறை சார்ந்த பயிற்சி

### இரண்டாம் ஆண்டு

1. இரண்டாம் வருடம் துவக்கத்தில் சிறப்பு பயிற்சிக்காக மற்ற கிளை மருத்துவமனைக்கு மாற்றம் செய்யப்படும்.
2. முதல்ஆறு மாதங்கள் துறை சார்ந்த பயிற்சி அடுத்த ஆறு மாதங்கள் சிறப்பு பிரிவு பயிற்சி

## சிறப்பு படிப்புகள்

அரவிந்த் கண் மருத்துவமனையும் பிற நிறுவனங்களும் இணைந்து வழங்கும் **பட்டயப்படிப்புகள் படிப்பதற்கு தகுதியுள்ள மாணவர்களுக்கு வாய்ப்புகள் உண்டு.**

## மாற்றல்

இரண்டு வருடம் முடிந்த பிறகு ஒரு மருத்துவமனையில் இருந்து மற்ற கிளை மருத்துவமனைகளுக்கு பணிக்காகவும், சுயமுன்னேற்றத்திற்காகவும், தேவைக்கேற்பவும் மாற்றம் செய்யப்படும்.



## விடுதியில் உள்ள வசதிகள்

1. மருத்துவமனையிலும் தங்கும் விடுதியிலும் நூலகங்கள்
2. யோகா வகுப்புகள்
3. ஆன்மீக ரீதியான சொற்பொழிவுகள் மற்றும் பஜனைகள்
4. விளையாட்டு வசதிகள் (கேரம், செஸ்)
5. தொலைக்காட்சி ஒளிபரப்புதல்,
6. பெற்றோரிடம் வாரம் ஒரு முறை தொலைபேசி மூலம் பேசும் வசதி

## மற்ற திறன்களை மேம்படுத்தும் திட்டங்கள்

1. கலை நிகழ்ச்சிகள், பெண்கள் தினம் மற்றும் சிறப்பு தினக் கொண்டாட்டங்கள்
2. மருத்துவமனை துறை சார்ந்த கண்காட்சிகள்
3. உடல் மற்றும் மனநலம் சார்ந்த சொற்பொழிவுகள்
4. துறைக்கேற்ற வெளியிடங்களைப் பார்வையிடுதல்

## வேலை வாய்ப்பு

1. பயிற்சி தேர்வில் வெற்றி பெற்ற அனைவருக்கும் நூறு சதவிகித வேலைவாய்ப்பு உறுதி
2. 19 வயதில் சுயமாக சம்பாதிக்கும் திறன், வாழ்க்கையில் தன்னம்பிக்கை ஆகியவை கிடைப்பதற்கான அரிய வாய்ப்பு
3. திருமணத்திற்கு பின்பு100க்கு மேற்பட்ட மருத்துவமனைகள் இருப்பதால் எதிர்பார்க்கும் இடங்களில் தொடர்ந்து வேலை பார்க்கும் வாய்ப்பு உள்ளது



## சம்பளம்

பயிற்சிக் காலம் வெற்றிகரமாக முடிவடைந்த பின் அப்போது நடைமுறையில் உள்ள ஊதிய விகிதப்படி சம்பளம் வழங்கப்படும். (உதாரணமாக) தற்சமயம் அமலில் இருக்கும் மாதாந்திர சம்பளம் ரூ.12,863/-

## இதர பயன்கள்

1. PF, ESI போன்ற மத்திய / மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன.
2. வருடம் ஒரு முறை உடல் நல பரிசோதனை
3. வருடம் ஒரு முறை சுற்றலா செல்லும் வசதி

## நான்கு அல்லது ஐந்து வருட முடிவில்

தகுதி மற்றும் வேலைத் திறமைக்கு ஏற்ப அவ்வப்போது கீழ்கண்டவாறு பதவி உயர்வு அளிக்கப்படும்.

1. பயிற்றுநர் (Tutor)
2. மேற்பார்வையாளர் (Supervisor)

## விண்ணப்பங்கள் கிடைக்கும் இடங்கள்

1. விண்ணப்பங்கள் ஏப்ரல்15ம் தேதி முதல் அனைத்து அரவிந்த் கண் மருத்துவமனைகள் மற்றும் அதன் கண் பரிசோதனை மையங்களிலும் வழங்கப்படும்.
2. +2 தேர்வு முடிவுகள் வந்தவுடன் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அந்தந்த பகுதியில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனை அல்லது அரவிந்த் கண் பரிசோதனை மையத்திற்கு அனுப்ப வேண்டும்.

மருத்துவர் அவர்கள் செவிலியர்களுக்கு பயிற்சி அளித்தல்



செவிலியர்களுக்கான நூலகம்



2008ம் வருடம் மதிப்பிற்குரிய முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் அரவிந்த் கண் மருத்துவமனைக்கு வந்தபொழுது செவிலியர்களுடன் உரையாடுதல்



2வருடம் பயிற்சி முடித்த பின் செவிலியர்கள் பணியாளர் ஆகும் முன்பு உறுதிமொழி எடுத்தல்

